JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

CC.No. 105/2021 Date:25.11.2025 P.W. 4 / LW

| | |
|---|---|
| பெயர் | திரு. சுரேஷ்குமார் |
| தந்தை பெயர், க/பெ | திரு. செல்வராஜ் |
| முகவரி | நெ. 17/8 வாசுதேவன் தோட்டம் பொன்னியம்மன் மேடு சென்னை |
| கிராமம் | |
| மாவட்டம் | |
| ஜாதி | |
| தொழில் | |
| மதம் | |
| வயது | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 25th day of November 2025.

1வது எதிரி ஆஜர், 2 முதல் 4 வரையிலான எதிரிகள் தரப்பில் சட்டப்பிரிவுகள் 355 BNSS பிரிவில் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

பூமணி என்பவரை எனக்கு எப்படி தெரியும் என்றால் 2001 ம் வருடம் எனக்கு ஒரு விபத்து பாடியில் வைத்து ஏற்பட்டது அதில் இருந்து பூமணி எனக்கு பழக்கமானார். மெர்லின் என்பவரை எப்படி தெரியும் என்றால் பூமணி என்பவரின் மகள் என்பதன் அடிப்படையில் அவரை தெரியும். நான் அண்ணா நகரில் தனியார் நிறுவனத்தில் டிரைவராக வேலை செய்து வருகிறேன். மெர்லின்க்கு நிச்சயதார்த்தம் பற்றி தெரியும் அது அண்ணா நகர் சி செல் ஓட்டலில் நடைபெற்றது தேதி நியாபகம் இல்லை. அந்த திருமணம் எதனால் தடைப்பட்டது என்றால் ஒரு முறை திருமணத்திற்கு முன்பாக நானும் பூமணி சாரும்அவரது மனைவியும் மாப்பிள்ளை வீட்டிற்கு சென்றோம் அப்போது அவர் தண்ணீர் அடித்திருந்தால் திருமணத்தை நிறுத்திவிட்டோம். மேற்கண்ட நிச்சயம் செய்த மாப்பிள்ளையின் பெயரில் உள்ள இடம் வீட்டை விற்றுவிட்டு மெர்லின் என்பவரின் பெயரில் உள்ள இடத்தில் வீடு கட்டவேண்டும் என்று கட்டாயப்படுத்தியதால் நிச்சயதார்த்ததோடு நின்றுவிட்டது என்று சொன்னால் சரியல்ல. 1வது எதிரியுடன் மெர்லின் நடைபெற்ற நிச்சயதார்த்ததிற்கு எனக்கு அழைப்பிதழ் வழங்கப்படவில்லை. நிச்சயதார்த்தம் எந்த தேதியில் நடைபெற்றது என்று நியாபகம் இல்லை அந்த நிச்சயதார்த்தம் முடியும் வரை நான் அங்கு தான் இருந்தேன் அதில் சுமார் 50 நபர்கள் கலந்துகொண்டார்கள். நிச்சயதார்த்ததின் போது போட்டோ வீடியோ எதுவும் எடுக்கப்படவில்லை. என்னிடம் காட்டப்படும் புகைப்படங்கள் செல்போன் மூலமாக தனியாக போட்டோ கிராபர், வீடியோ கிராபர் வைத்து எந்த புகைப்படமும்

வீடியோவும் எடுக்கப்படவில்லை. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் 1வது எதிரியின் தாயார் நிச்சயதார்த்ததின் மெர்லின் கழுத்தில் நெக்லஸ் அணிவிக்கிறார் அதை புகைப்படம் எடுக்கிறார்கள். அது யாருடைய தரப்பு என்று தெரியவில்லை. புகைப்படத்தில் உள்ள நிச்சயதார்த்தம் 1வது எதிரிக்கும் மெர்லின்கும் நடைெட்ப்பற்றது தான். நான் நிச்சயதார்த்ததில் கலந்துகொண்டதற்கு புகைப்பட ஆதாரமோ எவ்வித ஆதாரமும் இல்லை. மெர்லின் தந்தை விருப்ப ஓய்வு பெற்ற சிறப்பு ஆய்வாளர் என்றால் சரிதான். நிச்சயதார்தத்திற்கு முன்பாகவே 1வது எதிரியின் கன்னியாகுமரியில் உள்ள வீட்டின் பூச்சு வேலைக்கு பூமணி என்பவர் ரூ.2 லட்சம் கொடுத்தார். பணம் கொடுக்கும்போது நான் அங்கு இல்லை. பணம் கொடுத்தார் என்று சொன்ன போது நான் கேட்டேன். திருமணத்தின் மொத்த செலவான ரூ.10,28,000/- தொகையை பூமணி கொடுத்தார். அதில் பாதி தொகை ரூ.5,14,000/- எதிரிகள் தரப்பில் தருவதாக சொன்னார்கள் ஆனால் தரவில்லை. வரதட்சனை கேட்டார்கள் என்ற விவரமும் பணம் கொடுத்தார்கள் என்ற விவரமும் மெர்லின் என்பவர் சொல்லி தான் தெரியும். இந்த வழக்கு பதிவு செய்யப்பட்ட விவரம் நீதிமன்றத்திற்கு வந்த பின்பு தெரியுமா இல்லை முன்பே தெரியுமா என்றால் முன்பே தெரியும். ரூ.6 லட்சம் பணம் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் அது எவ்வளவு ரூபாய் நோட்டுகள் என்று டினாமினேசன் எனக்கு தெரியாது ஆனால் பணம் கொடுக்கும் போது அருகில் இருந்தேன். பூமணி என்பவரின் வீட்டின் 2வது மாடியில் உள்ள ஹாலில் வைத்து மேற்கண்ட பணத்தை கொடுத்தார்கள். நிச்சயதார்த்தம் மொட்டை மாடியில் நடைபெற்றது. அது 2வது மாடியின் மேல் உள்ளது. பணம் கேட்டது குறித்து புகார் எதுவும் கொடுப்பதற்கு முயற்சி எடுத்தேனா என்றால் இல்லை திருமணத்திற்கு பின்பி கொடுங்கையுரில் எதிரிகளுடன் மெர்லின் வசித்து வந்த போது 2 முறை சென்றதாக சொல்லியுள்ளேன் எந்த தேதியில் யாருடன் சென்றேன் என்றால் 2 மாதத்திற்குள்ளாக பூமணி சாருடன் சென்று வந்தேன். முகம் வாட்டமாக இருந்ததாக சொல்லியுள்ளேன் அது கருத்தரிப்பதற்கு முன்பாகும். அப்போது எதிரிகள் கொடுமைப்படுத்தியதாக மெர்லின் எதுவும் எங்களிடம் சொல்லவில்லை. மெர்லின் கருத்தரித்த பின்பு அவரது மாமியாரிடம் மெர்லினின் 100 சவரன் நகைகளில் 40 சவரன் நகைகள் காணவில்லை என்று கேட்ட போது கன்னியாகுமரியில் உள்ள வீட்டிற்காக 40 சவரன் நகையை அடகு வைத்து வீட்டிற்கு பணம் கொடுத்ததாக சொல்லியுள்ளார். அதன் பின்பு 24 சவரன் நகைகளை திருப்பி கொடுத்துவிட்டார்கள், 16 சவரன் நகைகளை இதுவதை திருப்பி தரவில்லை. கன்னியாகுமரியில் உள்ள வீட்டிற்கு 25 லட்சம் ரூபாய் கடன் வாங்கிய விவரத்தை மறைத்து திருமணம் செய்துள்ளார்கள். 16 சவரன் நகை என்னென்ன என்ற விவரம் தெரியாது அவர்கள் சொல்லி தான் தெரியும். கன்னியாகுமரியில் உள்ள வீடு திருமணம் செய்வதற்கு முதல் வருடமான 2017 ஆண்டு கிரகபிரவேசம் செய்துள்ளாகள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ரூ.25 லட்சம் கடன் உள்ளது என்ற விவரம் எனக்கு மெர்லின் என்பவர் சொல்லி தான் தெரியும் நேரடியாக தெரியாது. பெருங்குடி செல்வதற்கு 1வது எதிரி கார் வேண்டுமென்று கேட்டடார்கள் என்று சொல்லியுள்ளேன் ஆஜர் எதிரியின் குடும்பத்திற்கு ஏற்கனவே 4 கார்கள் உள்ளது என்று சொன்னால் அது சரிதான் அதை அவர்கள் டிராவல்ஸ்க்கு பயன்படுத்தினார்கள். மெர்லின் என்பவரின் தந்தையின் வற்புறுத்தலால் ஆஜர் எதிரி பணம் கொடுத்து கார் வாங்கினார் என்று சொன்னால் சரிதான்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிகாக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

**மறு விசாரணை / இல்லை**

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Judicial Magistrate,
Ambattur